மாவட்ட உாிமையியல் நீதிமன்றம், போடிநாயக்கனூா்.

**முன்னிலை : திருமதி. M.M.J. உம்முல் ஃபாிதா, B.A., B.L.,**

மாவட்ட உாிமையியல் நிதிபதி,

போடிநாயக்கனூா்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீசோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 03-ம் நாள்

2023 ஆம் ஆண்டு செப்டம்பா் மாதம் 20-ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 61 / 2020**

**(CNR.No:TNTH06-000172-2020)**

அய்யம்மாள் : வாதி

/எதிர்/

1. P. சீனியம்மாள்
2. M.P. பாஸ்கரன்
3. M.P. செந்தில் குமரன் (எ) குமரன் : பிரதிவாதிகள்

Amended as per order in Ia. 3/2022 dated on 10.08.2022

இவ்வழக்கு என் முன்பாக இன்று 20.09.2023ம் தேதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.அன்பரசு அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.வேங்கையா அவர்கள் ஆஜராகியும், வாதி தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் இன்று நீதிமன்றம் வழங்கிடும்:

**தீர்ப்புரை**

07.05.1992ம் தேதிய பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யகோாியும், வாதிக்கு பிரதிவாதி ரூ20,500/-ம் வழக்குதாக்கலான நாள் முதல் 29.08.2020ம்தேதி வரை ரூ.6955/-ம் 10.8% வட்டியும், வாதியின் அனுபவத்திற்கு பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென்று உறுத்துக்கட்டளைப்பாிகாரம் வேண்டியும், இதரபாிகாரங்கள் வேண்டியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Plaintiff called absent. Plaintiff has not come forward. For filing APC and to carryout amendment despite sufficient time given. Hence this court is constrained to dismiss this suit for default. No cost.

2023ம் வருடம் செப்டம்பா் மாதம் 20ம் நாள் இத்தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

M M J
UMMUL
FARITHA

Digitally signed by M M J UMMUL FARITHA
Date: 2023.09.20 14:53:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

போடிநாயக்கனூா்.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போடிநாயக்கனூா்.**

**முன்னிலை : திருமதி. M.M.J. உம்முல் ஃபாிதா B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
போடிநாயக்கனூா்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீசோபகிருது வருடம் ஆவணி மாதம் 25-ம் நாள்
2023 ஆம் ஆண்டு செப்டம்பா் மாதம் 11-ம் நாள் திங்கட்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 99 / 2022</u>**

**(CNR.No:TNTH06-000195-2022)**

1. தேனி மாவட்டம், போடிநாயக்கனூா் வட்டம், மேலச்சொக்கநாதபுரம் கிராமம், பட்டாளம்மன்கோவில் தெரு, கதவு எண்.3-1-11 என்ற விலாசத்தில் வசிக்கும் லேட்.வேலு மனைவி, இந்து, சுமாா் 81 வயதுள்ள லட்சுமி.

2. தேனி மாவட்டம், போடிநாயக்கனூா் வட்டம், மேலச்சொக்கநாதபுரம் கிராமம், பட்டாளம்மன்கோவில் தெரு, கதவு எண்.3-1-11 என்ற விலாசத்தில் வசிக்கும் லேட்.வேலு மகன், இந்து, சுமாா் 45 வயதுள்ள வீரன். **...வாதிகள்**

**/எதிர்/**

1. தேனி மாவட்டம், போடிநாயக்கனூா் வட்டாட்சியா் அலுவலகத்தில் பணிபுாியும் வட்டாட்சியா் அவா்கள்.

2. தேனி மாவட்டம், மாவட்ட ஆட்சியா் அலுவலகத்தில் பணிபுாியும் மாவட்ட ஆட்சியா் அவா்கள்.

3. தேனி மாவட்டம், போடிநாயக்கனூா் வட்டம், அணைக்கரைப்பட்டி பட்டாளம்மன் கோவில் தெரு, தெற்கு தெருவில் குடியிருக்கும் மாாியப்பன் மனைவி, இந்து சுமாா் 65 வயதுள்ள குருவம்மாள்.

4. தேனி மாவட்டம், போடிநாயக்கனூா் வட்டம், ரெங்கநாதபுரம், மாாியம்மன் கோவில் தெருவில் குடியிருக்கும், தா்மா் மனைவி, இந்து சுமாா் 60 வயதுள்ள கஸ்தூாி.

5. தேனி மாவட்டம், தேனி வட்டம், கோட்டூா் கிராமம், நடுத்தெருவில் வசிக்கும், மாாிச்சாமி மனைவி, இந்து, சுமாா் 55 வயதுள்ள முத்துலட்சுமி.

6. தேனி மாவட்டம், போடிநாயக்கனூா் வட்டம், அணைக்கரைப்பட்டி, EB தெருவில் குடியிருக்கும் சின்னபெருமாள் மனைவி, இந்து, சுமாா் 50 வயதுள்ள வீருசின்னு.

**... பிரதிவாதிகள்.**

வாதிகள் மற்றும் 3 முதல் 6 பிரதிவாதிகள் இறந்துபோன லேட்.வேலு என்பவாின் சட்டப்படியான வாாிசுகள் என்றும் அவா்களைத்தவிர வேறு வாாிசுகள் இல்லை என்று விளம்புகைப்பாிகாரம் வேண்டியும், வாதிகளுக்கு, பிரதிவாதிகள் இவ்வழக்கின் செலவுத்தொகையை செலுத்தவேண்டியும், இதர பாிகாரங்கள் கேட்டும் வாதிகளால்

இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | - | 24.06.2022. |
| வழக்கு மூலம் எழுந்த நாள் | | 04.04.2017, 07.12.2021 ஆகிய தேதிகளில் மேலச்சொக்கநாதபுரத்தில் உற்பத்தி. |
| தாவா மதிப்பு | - | ரூ. 5000/- |
| நீதிமன்ற முத்திரைக்கட்டணம் | - | தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் பிரிவு 25 (d)-ன் படி ரூ.150/-செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு என் முன்பாக இன்று 11.09.2023ம் தேதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P.அருண்குமார் அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.K.S.N.சிவமணி அவர்கள் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் தோன்றாத்தரப்பனராக்கப்பட்டும், வாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் இன்று நீதிமன்றம் வழங்கிடும்:

**தீர்ப்பாணை**

1. வாதி ஆஜரில்லை. வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத்தொகை இல்லை.

**சொத்து விபரம்**

- இல்லை -

**செலவுத்தொகைப்பட்டியல்**

- இல்லை -

2023ம் வருடம் செப்டம்பர் மாதம் 11ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**போடிநாயக்கனூர்.**